நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி தோழமைக் கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் ஆ.ராசா எம்.பி., சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய

மகத்தான பொறுப்பை நமது முதல்வர் ஏற்றுள்ளார்!

பவானிசாகர் செயல் வீரர்கள் கூட்டத்தில் ஆ.ராசா பேச்சு!

ஈரோடு, மார்ச் 31-

நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பவானிசாகர் சட்டமன்ற தொகுதியில் 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சத்தியமங்கலத்தில் நீலகிரி தொகுதி தி.மு.க.வேட்பாளர் ஆ.ராசா தலைமையில் நடைபெற்றது. ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் பங்கேற்ற 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் ஆ.ராசா பேசியதாவது:-

ஸ்பெக்ட்ரம் ஏலம் விடுவதாக சொன்னார்கள். அன்றைக்கு 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் என எல்லாரையும் நம்ப வைத்தார்கள். இன்றைக்கு என்ன தெரியுமா அதே ஸ்பெக்ட்ரத்தை ஏலமுறை இல்லாமல் தாரை வார்த்து கொடுத்துள்ளார்கள். அந்த கம்பெனிகள் எல்லாம் பா.ஜக்கு ரூ.400கோடி, ரூ.500 கோடி என நிதி கொடுத்திருக்கிறார்கள்.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருக்கும் முதல்வர்களை மோடி அரசு மிரட்டுகிறது. மம்தா பானர்ஜி, பட்நாயக் எல்லாம் இருக்கிறார்கள். இதை தட்டி கேட்டால் உடனடியாக அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சிபிஐ வந்து விடும் என்ற அச்சம் உள்ளது. இதையெல்லாம் வீட்டுக்கு அனுப்புவோம் என்று சொல்லும் ஆற்றல் மற்றும் துணிச்சல் உள்ள ஒரே தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான்.

தமிழ்நாட்டை காக்கும் பொறுப்பு இந்தியாவை காப்பாற்ற வேண்டிய மகத்தான பொறுப்பினை நமது தலைவர் ஏற்றுள்ளார். எனவே, இந்த தொகுதியில் போட்டியிடும் எனக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. பேசினார்.

இக்கூட்டத்தில், 'இந்தியா'கூட்டணி கட்சி நிர்வாகிகள், செயல்வீரர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களுக்கு

கருநாடக மாநில தி.மு.க.வினர் ஆதரவு வழங்குவீர்!

துணை முதல்வர் டி.கே. சிவகுமார் கடிதம்!

பொங்களூரு, மார்ச் 31-

கருநாடகா மாநிலத்தில் நடைபெறும் நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிடும் 'இந்தியா' கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு கருநாடக மாநிலதி.மு.க. ஆதரவு வழங்கக் கோரி அக்கட்சியின் தலைவரும், துணை முதல்வருமான டி.கே. சிவகுமார் தி.மு.க. அமைப்பாளர் ந. இராமசாமிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதம் வருமாறு:-

பாரத நாட்டில் நடைபெறவிருக்கும் 18வது நாடாளுமன்ற தேர்தலில் 28 அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய பிளாக், (INDIAN NATIONAL DEVELOPMENT INCLUSIVE ALLIANCE) பெயரில் நம் நாட்டின் ஜனநாயகத்தை காப்பாற்ற ஒன்று பட்டு தேர்தலில் எதிர்ப்பது என்பது நமக்கெல்லாம் தெரிந்த செய்தியாகும்.

ஒன்றிய அரசின் சர்வாதிகாரம், மதவாதபோக்கை கண்டித்தும் மற்றும் அரசின் சாசன உரிமைகளை காப்பாற்ற எடுத்துவரும் நடவடிக்கைகள் மற்றும் அரசின் அமைப்பு சட்ட உரிமைகளை காப்பாற்ற ஒன்று பட்டு கட்சிகள் இந்த நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்கின்றன.

கருநாடகத்தில் மதவாத கட்சிகளை ஒதுக்கிதள்ளி எச்சரிக்கையுடன் வாக்காளர்களை ஒன்றுதிரட்டுவது நமது அதிமுக்கிய பணியாக இருக்கிறது. இதன் காரணமாக 2024ல் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் கருநாடகத்தில் உள்ள 28நாடாளுமன்ற தொகுதிகளில் பாரத தேசிய காங்கிரஸ் கட்சியின் வேட்பாளருக்கு தங்கள் கட்சி பெருவாரியான ஆதரவும் மற்றும் ஒத்துழைப்பும் அளித்திட கருநாடக மாநில பிரதேஷ் காங்கிரஸ் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் கட்சி தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் செயல் வீரர்கள் தீவிரமாக தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி இந்திய பிளாக் கூட்டணி கொள்கைகளுக்கு ஆதரவாக காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் வெற்றிக்கு ஒத்துழைக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணம்!

01.04.2024 (திங்கட்கிழமை)

திருநெல்வேலி

நேரம்	மாவட்டம்	இடம்
மாலை 4.00	இராதாபுரம் (திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்)	பெருந்தலைவர் காமராஜர் சிலை அருகில், வள்ளியூர்

கன்னியாகுமரி

நேரம்	மாவட்டம்	இடம்
மாலை 4.30	கன்னியாகுமரி	குழித்துறை அண்ணா சிலை
மாலை 5.30		புதுக்கடை பேருந்து நிலையம்
மாலை 6.15		குளச்சல் பீச் முக்கு
மாலை 7.00		நாகர்கோவில் வடசேரி அண்ணா சிலை
மாலை 7.45		கொட்டாரம் ஜங்ஷன்

சுற்றுலா துறை அமைச்சர் ராமச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் செல்வி பொ. லட்சுமி மற்றும் குன்னூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் சுனிதா நேரு ஆகியோர் முன்னிலையில் உபதலை, எடபள்ளி,ஜகதளா பேரூராட்சி, பேரட்டி, உலிகல் பேரூராட்சி, குன்னூர் கன்டோன்மென்ட், வண்டி சொலை மற்றும் பர்லியார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தி.மு.க. மகளிர் அணி சகோதரிகளுடன் மகளிர் அணி பிரச்சாரகுழுவினருடன் ஆலோசனை கூட்டம் நடத்தினார். மேலும் கீழ் கோத்தகிரி படுகா சமுதாயத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களுடன் அந்த பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன் முன்னிலையில் அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றிய அளவிலான இண்டியா கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் பேசினார். உடன் ப.சிதம்பரம் எம்.பி. வேட்பாளர் கார்த்திக் ப.சிதம்பரம் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் எஸ்.மாங்குடி, சிவகங்கை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கே.முருகவேல்,கல்லல் ஒன்றிய செயலாளர் நா.நெடுஞ்செழியன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

பெரம்பலூர் கழக வேட்பாளர் அருண் நேருவை ஆதரித்து

எளம்பலூரில் இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன் வாக்குச்சேகரித்தார்!

பெரம்பலூர், மார்ச் 31-

பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.என். அருண்நேரு விற்கு, பெரம்பலூர் ஒன்றியத்திற்குட்பட்ட எளம்பலூர் கிராமத்தில் திரண்டிருந்த பொதுமக்களிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் வாக்குகள் சேகரித்தார்! அப்போது அவர் பேசுகையில்,நள்ளிரவுக் கூட்டணி, கள்ளக்கூட்டணி இரண்டையும் தோற்கடிக்க வேண்டும் என்றும் ஜனநாயகத்திற்கு விரோதமாக செயல்பட்டு வரும் மத்திய அரசை அகற்ற வேண்டும் என்றும் பேசினார்!

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் கலந்து கொண்டனர்!

பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.என். அருண்நேரு, பெரம்பலூர் ஒன்றியத்திற்குட்பட்ட எளம்பலூர், செங்குணம், அருமடல், கவுல்பாளையம், நெடுவாசல், க.எறையூர், கல்பாடி, அ.குடிக்காடு, அயிலூர், சிறுவாச்சூர், நொச்சியம், செல்லியம்பாளையம், புதுநடுவலூர், ரெங்கநாதபுரம், தம்பிரான்பட்டி,

கீழ்க்கணவாய், வேலூர், சத்திரமனை உள்ளிட்ட கிராமங்களில் பொதுமக்களிடம், பெரம்பலூர் ஒன்றியச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எம்.ராஜ்குமார் தலைமையில் வாக்குகள் சேகரித்தார்.

எளம்பலூர் கிராமத்தில் திரண்டிருந்த பொதுமக்களிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு பேசுகையில், நள்ளிரவுக்கூட்டணி, கள்ளக்கூட்டணி ஆகிய இரண்டையும் தமிழகத்தில் தோற்கடிக்க வேண்டும் என்றும், ஜனநாயகத்திற்கு விரோதமாக செயல்பட்டு வரும் மத்திய அரசை அகற்ற வேண்டும் என்றும் பேசினார்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், எஸ். அண்ணாதுரை,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரி பாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், தொ.மு.ச.கவுன்சில் பேரவை மாவட்ட தலைவர் கே.கே.எம்.குமார்,தொ.மு.ச. மாவட்ட கவுண்சில் மாவட்ட செயலாளர் ஆர். ரெங்கசாமி,

எளம்பலூர் முன்னாள் ஊராட்சி மன்றக் தலைவர் ஆர்.சி.ராமசாமி,

காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் சுரேஷ், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஜெயசீலன் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி, இடது கம்யூனிஸ்ட், வலது கம்யூனிஸ்ட் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் கட்சி, அகில இந்திய தொழிலாளர் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.என். அருண்நேருவிற்கு, கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் வாக்குகள் கேட்டு எளம்பலூர் கிராமத்தில் பேசுகையில்,

ஜனநாயகம் தோற்று போய் விட்டது. உதாரணத்திற்கு ம.தி.மு.க.மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சிகளுக்கு சின்னம் வழங்கவில்லை. தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் பாரபட்சம் காட்டி வரும் பா.ஜக.அரசை தூக்கி எறிய வேண்டும். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கள்ளக் கூட்டணி, நள்ளிரவுக் கூட்டணி ஆகியவற்றை தோற்கடிக்க வேண்டும் என்றும் தி.மு.க.தலைமையிலான கூட்டணி, மகத்தான கூட்டணி, வெற்றிக் கூட்டணி எனவும் கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்குவதில் தேர்தல் ஆணையம் பாரபட்சம் காட்டுகிறது. தேர்தல் நடக்குமா என்று சந்தேகம் எழுந்துள்ளது. பா.ஜ.க.அணியில் போட்டியிடும் கட்சிகளுக்கு உடனுக்குடன் சின்னம் வழங்கப்படுகிறது. நடுநிலையோடும், நேர்மை யோடும் செயல்படவேண்டிய தேர்தல் ஆணையம் இன்றைக்கு கேள்விக்குறியாக இருக்கிறது.

நாட்டில் உள்ள ஜனநாயகத்தைக்காப்பாற்றவும், அரசியலமைப்புச் சட்டத்தைக் காப்பாற்றவும், மதச் சார்பின்மை என்ற மகத்தான கொள்கையைக் காப்பாற்றவும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்றும் முத்தரசன் பேசினார்).

முதல்வரின் சாதனையால் - மக்களின் ஆதரவால் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்கள்

அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவர்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி பேச்சு!

மதுரை, மார்ச் 31-

மதுரை கிழக்கு தொகுதி ஒத்தக்கடையில் தேர்தல் பணிமனையை திறந்து வைத்த மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்கள் சாதனை நாடு போற்றக்கூடியது, இதனால் 'இந்தியா' கூட்டணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சு.வெங்கடேசன் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என தெரிவித்தார்.

மதுரை நாடாளுமன்ற 'இந்தியா' கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சு. வெங்கடேசனை ஆதரித்து அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் வாக்குகள் சேகரிக்கும் பணியும் தேர்தல் பணிமனை அலுவலகங்கள் திறக்கும் பணியும் துரிதமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மதுரை கிழக்கு தொகுதி, கிழக்கு ஒன்றியம் யா.ஒத்தக்கடையில் மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி தேர்தல் பணிமனையை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது பேசிய அவர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு நிதி உதவி, கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம் என பல்வேறு முத்தான திட்டங்களை செயல்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறார். இதனால் நாளுக்கு நாள் பெண்கள் பொது மக்களின் ஆதரவு பெருகி வருகிறது.

மதுரை கிழக்கு தொகுதியில் நூறு குடிநீர் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன, குடிநீர் தட்டுப்பாடு இல்லை என்ற நிலை உள்ளது. இதேபோல் சாலை வசதி, பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிட வசதி, ரேஷன் கடை என பல்வேறு திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒத்தக்கடையில் சாக்கடை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் ரூபாய் 82 கோடி ஒதுக்கப்பட்டு பாதாள சாக்கடை அமைக்கும் பணி தேர்தல் முடிந்தவுடன் துவக்கப்பட உள்ளது. ஒத்தக்கடை ஒரு நகரம் போல் மாற்றப்பட்டு தன்னிறைவு பெற்ற ஊராக மாறும். தொடர்ந்து இந்த பகுதி மக்கள் ஆதரவு கொடுத்ததால்

சென்ற முறை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் சு.வெங்கடேசன் வெற்றி பெற்றார், இம்முறையும் தேர்தலில் அதைவிட பல மடங்கு கூடுதல் வாக்குகள் பெற வேண்டும், பெருமையை சேர்க்க வேண்டும் இங்கு சு.வெங்கடேசன் வேட்பாளர் அல்ல தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் வேட்பாளர் என்பதை மனதில் கொண்டு அனைவரும் செயலாற்ற வேண்டும் இவ்வாறு பேசினார்

மேலும் இந்நிகழ்ச்சியில் மதுரை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.பா.ரகுபதி, தொகுதி பொறுப்பாளர் பெருநாழி போஸ், செயற்குழு உறுப்பினர் வடிவேல் முருகன், கிழக்கு ஒன்றிய துணை சேர்மன் பாலாண்டி, ஊராட்சி மன்றத் தலைவர் அண்ணாமலை, அணிகளின் அமைப்பாளர்கள் வக்கில் கலாநிதி, ஒத்தக்கடை சரவணன், வக்கில் மூர்த்தி, மகுடபதி, இளைஞர் அணி வன்னிமுத்து, நிஷாந்த், பாண்டி, ஒன்றிய கவுன்சிலர்கள் போஸ், முத்து ராமன், பகுதி செயலாளர் பெ.சசிகுமார், வினோத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொன்னுத்தாய் மற்றும் பலர் பங்கேற்றனர்.

விடுதலைப் போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் 264 வது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று (30.03.2024) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, மற்றும் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன் மற்றும் டாக்டர் குமார், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.